(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 7 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : சுப்ரமணி

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.12.2017

மு வி ---

நான் தற்போது ராம்னி நகரில் குடியிருக்கிறேன். மெஜுரா கோட்சில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். அழகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ் உரிமையாளர் வீட்டில் கேட் வாட்சுமேனாக வேலை பார்க்கிறேன். சதீஸ்கண்ணன் தாயார் விஜயா அங்கு வீட்டு வேலை பார்க்கிறார். 28.2.17 அன்று மதியம் 1-1/2 மணிக்கு நான் கேட்டில் இருந்தேன் . விஜயா வீட்டில் வேலை உள்ளே பார்த்து கொண்டிருந்தார். எதிரி ராஜேஷ் வந்து அவர் அம்மாவிடமிருந்து சாவி வாங்கி வர சொல்லி என்னிடம் சொன்னார். எதிரி ராஜேஷ் இன்று நீதிமன்றததில் இருக்கிறார். எதிரி ராஜேஷ் வெளியூர் செல்வதற்காக துணி மணி எடுக்க வேண்டும் வீட்டு சாவி வேண்டும் என அவர் அம்மா விஜயாவிடமிருந்து சாவி வாங்கி வர சொன்னார். விஜயாவிடம் நான் போய்அவரது வீட்டு சாவி வாங்கி வர சொல்லி எதிரி ராஜேஷ் சொல்வதாக சொன்னேன். சாவியை விஜயாவிடம் கேட்டேன் . விஜயா அவர் வீட்டு

சாவி தந்தார். அந்த சாவியை ராஜேஷ்சிடம் கேட் ஜன்னல் வழியாக கொடுத்தேன். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

நான் வீட்டு வாட்சுமேனாக இருக்கிறேன். யார் வந்தாலும் அதை பதிவேட்டில் எழுதி வைப்பேன் என்றால் சரிதான். அன்றைக்கு ராஜேஷ் வந்ததை நான் எழுதவில்லை. அம்மாவை மகன் பார்க்க வந்ததால் எழுதவில்லை. சாவி மட்டும் தான் கேட் ஜன்னல் வழியாக கொடுத்தேன். சாவி சின்ன சாவி தான். பூட்டிற்குரிய சாவி தான். ராஜேஷ் வரும் போது என்ன மாதிரியான உடை அணிந்திருந்தார் என்பதை நான் கவனிக்கவில்லை. 2 சக்கர வாகனத்தில் வந்தார். ராஜேஷ் மட்டும் தான் வந்தார் வேறு யாரும் உடன் வரவில்லை. போலிசார் நேற்று வந்து இன்று நீதிமன்றத்திற்கு வர சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினர். போலிசார் என்னிடம் அதற்கு முன்பு விசாரிக்கும் போது கையெழுத்து வாங்கவில்லை. போலிசார் என்னை வேலை பார்த்த இடத்தில் வைத்து விசாரித்தனர். நான் வாட்சுமேன் வேலை செய்வதால் போலிஸ் ஆதரவு வேண்டும் என்பதற்காக போலிசார் சொல்லி கொடுத்தற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் ராஜேஷ் வரவில்லை என்றால் தவறு. ராஜேஷ்சிடம் நான் சாவி கொடுக்கவில்லை என்றால் தவறு.

ம வி --- இல்லை.